செ.வெ.எண்: 149/2019 நாள்: 14.3.2019

**திருவண்ணாமலை மாவட்டம் - பாராளுமன்ற தேர்தல் 2019**
**வாக்குப்பதிவு இயந்திரங்கள் மூலம் வாக்களிப்பது குறித்த செயல்விளக்கம்**
**முதியோர் இல்லத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சி**
**மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெற்றது...**

திருவண்ணாமலை மாவட்டத்தில் இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்திரவின்படி வருகின்ற பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு இன்று (14.3.2019) திருவண்ணாமலை கிரேஸ் முதியோர் இல்லம் மற்றும் நகராட்சி மத்திய பேருந்து நிலையத்தில் நடைபெற்ற பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகளில், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு. மு. பிரதாப், இ.ஆ.ப. அவர்கள், வருவாய் கோட்ட அலுவலர் செல்வி. ஸ்ரீதேவி அவர்கள், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி கிறிஸ்டீனா டார்த்தி அவர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலை திண்டிவனம் சாலையில் உள்ள கிரேஸ் முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள முதியவர்களுக்கு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வாக்களிப்பது குறித்த விழிப்புணர்வு செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின் பேரில் தமிழ்நாட்டில் வருகின்ற பாராளுமன்ற பொதுத் தேர்தலில் அனைத்து வாக்குப் பதிவு மையங்களுக்கு உட்பட்ட வாக்குச் சாவடிகளிலும் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம் (EVM) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவி (VVPAT) பயன்படுத்தப்படுகிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள இரண்டு பாராளுமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட 8 சட்டமன்ற தொகுதிகளிலும் வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு வாக்காளர்களிடம் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

மாவட்ட ஆட்சியர் பேசுகையில் 'திருவண்ணாமலை மாவட்டத்தில் 7 முதியோர் இல்லங்கள் உள்ளன. இதில் ஏற்கனவே 117 முதியவர்கள் வாக்காளர் பட்டியலில் உள்ளார்கள் மேலும், சிறப்பு முகாம்கள் மூலம் 70 மனுக்கள் பெறப்பட்டு, வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படவுள்ளது. இதன் மூலம் 187 முதியவர்கள் வரும் பாராளுமன்ற தேர்தலில் வாக்களிக்க உள்ளார்கள். இந்திய தேர்தல் ஆணையத்தின் மூலமாக வரும் பாராளுமன்ற தேர்தலில் முதல் முறையாக வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கிளை உறுதி செய்யும கருவி பயன்படுத்தப்படுகிறது' என்றார். இதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அவர்கள் முன்னிலையில் திருவண்ணாமலை நகராட்சி மத்திய பேருந்து நிலையத்தில் வாக்களிப்பதன் ஜனநாயக கடமை குறித்தும், 100% வாக்களிப்பதன் அவசியம் குறித்தும் நடைபெற்ற விழிப்புணர்வு பிளாஸ் மாப் (குடயளா ஆழடி) நிகழ்ச்சி நடைபெற்றது. மேலும், மாவட்ட ஆட்சியர் அவர்கள் அரசு பேருந்துகளில் வாக்காளர் விழிப்புணர்வு ஸ்டிக்கர்களை ஒட்டி, பேருந்து நிலையத்தில் இருந்த வாக்காளர்களின் கை மணிக்கட்டில் விழிப்புணர்வு ரிப்பன் கயிற்றினை கட்டினார்.

இதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சியரக கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு மாவட்டத்தில் உள்ள திருமண மண்டபங்கள் கடைபிடிக்க வேண்டிய தேர்தல் நடத்தை விதிகள் குறித்த கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் பேசியதாவது 'இந்திய தேர்தல் ஆணையத்தின் மூலமாக பாராளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ளதால் மாவட்டத்தில் உள்ள திருமண மண்டபங்கள் தேர்தல் நடத்தை விதிகள் கீழ் வருகிறது. திருமண மண்டபங்களில் வழக்கமான திருமணம் உட்பட நிகழ்ச்சிகள் நடத்தலாம். அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் தொடர்பான கூட்டங்கள் நடத்தும் போது சம்மந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் அல்லது உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் அனுமதி வழங்கி இருந்தால் மட்டுமே நிகழ்ச்சிகள் நடத்தலாம். அனுமதி இல்லாமல் திருமண மண்டபங்களில் அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் தொடர்பான கூட்டங்கள், நிகழ்ச்சிகள் நடைபெற்றால் சம்மந்தப்பட்ட திருமண மண்டபங்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், திருமண மண்டபங்களில் நடைபெறும் திருமணம் உட்பட அனைத்து பிற நிகழ்ச்சிகளின் போது அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் தொடர்பான பேனர்கள், சின்னங்கள், கொடிகள் இடம்பெறக் கூடாது. திருமண மண்டபங்களில் தேர்தல் நடத்தை விதி முறைகள் கடைபிடிக்கப்படும் நாட்கள் வரை சாதி, மதம் தொடர்பான எந்த நிகழ்ச்சிகள் இருந்தாலும் அனுமதி வழங்கக்கூடாது. தேர்தல் வாக்குப்பதிவு நடைபெறும் நாள் 48 மணி நேரத்திற்கு முன்பு திருமண மண்டபங்களில் தேர்தல் அலுவலர்கள் சோதனை மேற்கொள்வார்கள். அதனால் வாக்குப்பதிவு நாள் முன்னர் 48 மணி நேரத்திற்கு முன்பு வெளியாட்கள் யாரும் தங்கக் கூடாது. தேர்தல் நடத்தை விதி மீறல்கள் தொடர்பாக Cvigil கைபேசி ஆப் மூலம் புகைப்படங்கள், வீடியோக்கள் பதிவு செய்து புகார் அனுப்பும் வசதி இந்த முறை நடைமுறைக்கு வந்துள்ளது' என்றார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.**